தகவல் சட்டம் 2005
அறியும் உரிமைச்

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட்,
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590.

**<u>ஆணை நாள் 15.06.2026</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு. ரா. பிரியகுமார், பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். CP 2939/B/2023</u>**

திரு. மு. சங்கர் ... மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொது தகவல் அலுவலர்,
உயர்நீதிமன்ற சட்ட பணிகள் ஆணைக்குழு,
உயர்நீதிமன்ற மதுரை கிளை,
மதுரை-625023. ... பொது அதிகார அமைப்பு

**<u>ஆணை</u>**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் (18.12.2025) அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்க்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது:-

> **“ஆணையத்திலிருந்து 08.12.2025 தேதியிட்ட விசாரணை அறிவிப்பு அழைப்பாணையை பெற்றுக்கொண்டு பொது அதிகார அமைப்பின் சார்பாக எவரும் ஆணைய விசாரணைக்கு கலந்து கொள்ளவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012, விதி 8(2)ன்படி பொது தகவல் அலுவலர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஆனால் விசாரணைக்கு ஆஜராகாதது குறித்து பொது தகவல் அலுவலரால் எவ்வித தகவலும் ஆணையத்திற்கு தெரிவிக்கப்படவில்லை. இந்நிலையில், பொது தகவல் அலுவலர் / உயர்நீதிமன்ற சட்ட பணிகள் ஆணைக்குழு, உயர்நீதிமன்ற மதுரை கிளை அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 20(1)ன்கீழ் அதிகபட்ச தண்டமாக ரூ.25,000/- ஏன் விதிக்கக் கூடாது என்பதற்கு அவரது எழுத்து மூலமான விளக்கங்களை <u>08.05.2026</u> அன்று ஆணையத்தின் முன்பு நேரில் ஆஜராகி, இவ்வாணையத்தில் சமர்ப்பிக்க பொது தகவல் அலுவலருக்கு இதன்மூலம் உத்திரவிடப்படுகிறது.**
> **இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள், மனுதாரர் 01.08.2023 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள இனங்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த முழுமையான தகவல்களை, மேல்முறையீட்டாளருக்கு சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்து, அவர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலை இணைத்து ஒரு அறிக்கையாக <u>08.05.2026</u> அன்று ஆணையத்திற்கு நேரிடையாக வந்து சமர்ப்பிக்குமாறு, தவறும்பட்சத்தில் முன்னாள்/இந்நாள் பொதுத் தகவல் அலுவலர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 சட்டப்பிரிவு 20(1)-ன் கீழ் ரூ.25,000/- அபராதம் விதிக்கவும், சட்டப்பிரிவு 20(2)-ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் மற்றும் 19(8)(b)-ன்படி மேல்முறையீட்டு இழப்பீடு வழங்குதல் போன்ற தண்டனை நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கவும் நேரிடும் என்று பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.”**

2. மேற்கண்ட உத்தரவினைத் தொடர்ந்து (15.06.2026) **இன்றைய விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது:-**

- **பொது தகவல் அலுவலருக்கு 2 முறை வாய்ப்பு வழங்கப்பட்டும், அவர் அதனை பயன்படுத்திக்கொள்ளாமல், மனுதாரருக்கு தகவல் வழங்காமல் இருந்ததனால்,**

**தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(8)(b)-இன்கீழ் ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) (வரைவோலையாக) இழப்பீடாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 2 வார காலத்திற்குள் மனுதாரருக்கு வழங்க உத்தரவிடப்படுகிறது.**

- **மனுதாரருக்கு இழப்பீடு வழங்கி, வழங்கப்பட்டதற்கான உரிய சான்றினை <u>10.07.2026</u> அன்று இவ்வாணையத்திற்கு பதிவஞ்சல் வாயிலாக சமர்ப்பிக்க பொது தகவல் அலுவலர், உயர்நீதிமன்ற சட்ட பணிகள் ஆணைக்குழு, உயர்நீதிமன்ற மதுரை கிளை, மதுரை அவர்களுக்கு இதன்மூலம் உத்திரவிடப்படுகிறது.**

**ஒம்/-(ரா. பிரியகுமார்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

**<u>வழக்கு எண். CP 2939/B/2023</u>**

**பெறுநர்**

1. பொது தகவல் அலுவலர்,
   உயர்நீதிமன்ற சட்ட பணிகள் ஆணைக்குழு,
   உயர்நீதிமன்ற மதுரை கிளை,
   மதுரை-625023.

2. மேல்முறையீட்டாளர்,
   திரு. மு. சங்கர்,
   எண்.7/22, கருணாநிதி காலனி,
   காரிப்பட்டி அஞ்சல்,
   வாழப்பாடி வட்டம்,
   சேலம் மாவட்டம்-636106.
   செல்.6379670092.

Copy to: File. GP PC
150626